1980 ஆகஸ்ட் 5]

கொங்கணாபுரம் ஒன்றியப் பகுதியில் ‘ ராகிமால்ட் ’ தொழிற்சாலை.

*வினா எண் 99.—**திரு. இ. கணேசன் : மாண்புமிகு ஊரகத் தொழில்** அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி தொகுதியில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ‘ ராகிமால்ட் ’ தொழிற்சாலை ஒன்று துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கணாபுரம் பகுதியில் மூலப்பொருளான ராகி ஏராளமாக விளைகின்றது. அங்கே ஒரு தொழிற்சாலை நிறுவினால், அந்தப் பகுதியிலே உள்ள பின்தங்கிய வகுப்பினருக்கு வேலை கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, அரசு இனி மேலாவது அங்கே ராகி மால்ட் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் அரசிடம் ஏதும் திட்டமில்லை. அதுபற்றி அப்படிப்பட்ட தொழிற்சாலை துவக்க வேறு எவரும் சான்றிதழ் கேட்கவில்லை. யாராவது முயற்சி எடுத்தால், நிச்சயமாக அரசு ஆதாவு நல்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாக விளையக்கூடிய மரவள்ளிக் கிழங்கை வைத்து, குளுகோஸ் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.